**வரையறுக்கப்பட்ட இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் (தனியார்) கம்பனி – 2016**

வரையறுக்கப்பட்ட இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் (தனியார்) கம்பனியின் (''கம்பனி'') 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாடுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இவ் அறிக்கைத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களினுள் வரைபு வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2016 ஆம் ஆண்டிற்கான வரைபு வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் இவ் அறிக்கைத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2 கணக்காய்விற்கான சான்றின்மை**

கம்பனிச் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் நிலையான சொத்துப் பதிவேடு தயாரிக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை.

**2.3 சொத்துக்களும் பொறுப்புக்களும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியால் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் சுட்டிக்காட்டப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்களின் விபரங்கள் பின்வருமாறுள்ளன.

| **சொத்துக்கள்** | **தொகை** | |
|---|---|---|
| | **ரூபா** | |
| | **தொகுதி** | **கம்பனி** |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 682,925,134 | 636,620,740 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 196,681,226 | 159,653,930 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **879,606,360** | **796,274,670** |
| **பொறுப்புக்கள்** | | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 650,769,605 | 638,173,306 |
| நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | 151,318,938 | 138,479,166 |

| | | |
|---|---|---|
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **802,088,543** | **776,652,472** |
| உரிமை மூலதனம் | 77,517,817 | 19,622,198 |
| **மொத்த உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | **879,606,360** | **796,274,670** |
| | | |
| மொத்த வருமானம் | 858,638,820 | 625,623,892 |
| மொத்தச் செலவினம் | 848,559,607 | 624,165,922 |
| **ஆண்டிற்கான மிகை** | **10,079,213** | **1,457,970** |

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2003 இன் 27 ஆம் இலக்க தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அதிகாரச்சட்டத்தின் 06(2) ஆம் பிரிவு | முதலாவது டிஜிற்றல் அரசாங்க கொள்கை 2010 தொடக்கம் 2012 வரையான 03 ஆண்டு காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டிருந்தது. கொள்கை மாற்றியமைப்பு/ திருத்தங்கள் 2013 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் இது 2018 செப்தெம்பர் 6 வரை பூர்த்தி செய்யப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 133(1) ஆம் பிரிவு | கம்பனியின் வருடாந்த பொதுக் கூட்டம் 2007 ஆம் ஆண்டிலிருந்து 2016 திசெம்பர் 31 வரை நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவு | கூட்டிணைந்த திட்டமொன்று கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.5 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. ஆகையால் நடைமுறையல்லாச் சொத்துக்களின் இருக்கும் தன்மையை கணக்காய்வில் குறிப்பிட முடியாதிருந்தது. |

**2.5 போதியளவு அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய திட்டமிடல் திணைக்களத்திடமிருந்து கூகிள் லூன் (Google Loon) செயற்திட்டத்திற்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காததுடன் கம்பனியின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இது உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நாடு முழுவதற்கும் இணையத்தள வசதிகளை வழங்கும் நோக்கத்துடன் அமுல்ப்படுத்தப்பட்ட கூகிள் லூன் செயற்திட்ட செயற்பாட்டிற்காக 2015 யூலை 28 இல் கூகிள் லூன் எல்எல்சீயுடன் கம்பனியானது புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தை

கைச்சாத்திட்டிருந்தது. சுங்கத்திடமிருந்து கூகிள் லூன் உபகரணத்தை விடுவிப்பதற்காகவும் செயற்திட்டத்தை மேம்படுத்துவதற்காகவும் முறையே ரூபா 1,851,322 மற்றும் ரூபா 6,427,941 தொகைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவிடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் கூகிள் லூன் செயற்திட்டத்திற்காக அல்லாமல் ஏனைய Wi-Fi செயற்திட்டத்திற்காக ரூபா 6,187,941 செலவினம் ஏற்பட்டிருந்தது என அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும் கம்பனியின் பதிலை உறுதிப்படுத்துவதற்கான சான்றெதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியால் அமுல்ப்படுத்தப்பட வேண்டிய அனைத்து செயற்திட்டங்களினதும் ரூபா 9,286.09 மில்லியன் தொகையான மதிப்பிடப்பட்ட கிரயம் 2016 சனவரி 20 இல் தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் நோக்கெல்லை மற்றும் நடவடிக்கைகள் மாற்றப்பட்டு 2016 திசெம்பர் 2 இல் ரூபா 3,255.3 மில்லியன் வரை இது திருத்தப்பட்டிருந்தது.

(ஆ) 65 செயற்திட்டங்கள் 2016 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் தேவைப்பாடுகள் குறிப்பாக இனங்காணப்படாமை மற்றும் செயற்திட்டங்களின் பயனாளி நிறுவனங்களுடன் நேரடியான தொடர்புகள் காணப்படாமை காரணமாக 10 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கான அங்கீகாரம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தால் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பில் அன்ட் மெலின்டா கேட்ஸ் பவுண்டேஷனின் (Bill and Melinda Gates Foundation) கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் கம்பனியின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2016 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட 55 செயற்திட்டங்களிற்கான நிதியேற்பாடுகளை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை கம்பனி ஆற்றியிருக்காததால் மொத்தச் செயற்திட்டங்களிற்கான ரூபா 681,036,485 தொகையான செலவினம் குறைநிரப்பு மதிப்பீடுகள் மூலம் பெறப்பட வேண்டியிருந்தது.

(உ) 2016 ஆம் ஆண்டிற்காக லங்கா அரசாங்க வலையமைப்பு செயற்திட்டம் தொடர்பாக ரூபா 850 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயம் 2016 சனவரி 20 இல் தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 2 இல் இது ரூபா 1.13 மில்லியனாக திருத்தம் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை 13,026 சதவீதத்தால் திருத்தம் செய்யப்பட்ட மதிப்பீட்டை விஞ்சி ரூபா 148.33 மில்லியனாக இருந்தது.

(ஊ) செயற்திட்ட நடவடிக்கைகள் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் லங்கா அரசாங்க வலையமைப்பு 2.0 செயற்திட்டத்திற்காகவும் லங்கா அரசாங்க கிளவுட் 1.0 (எல்ஜீசீ 1.0) மற்றும் லங்கா அரசாங்க வலையமைப்பு (எல்ஜீஎன் 1.0) என்பவற்றின் பராமரிப்பிற்காகவும்

தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரம் முறையே 2016 யூன் 7 மற்றும் 2016 ஏப்ரல் 20 இலேயே பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதிலுள்ள தாமதம் செயற்திட்ட அமுல்ப்படுத்தலில் ஏற்பட்ட தாமதத்திற்கு காரணமாக இருந்தது.

### 3.1.2 செயற்பாடு மற்றும் மீளாய்வு

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் ரூபா 681 மில்லியன் செலவினத்தை மேற்கொண்டு நிறைவேற்றப்பட்ட செயற்திட்டங்களின் பௌதீக ரீதியான செயன்முன்னேற்றம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. “ஈ-சுவபிமணி” (e-swabhimani) என பெயரிடப்பட்ட தேசிய விருதுவழங்கல் விழா மாத்திரம் நூறு சதவீத செயன்முன்னேற்றத்தை அடைந்திருந்ததுடன் மிகுதி 54 செயற்திட்டங்களில் 47 செயற்திட்டங்கள் 60 சதவீதத்தை விடக் குறைவான பௌதீக செயன்முன்னேற்றத்தை அடைந்திருந்தது.

(ஆ) செயற்திட்டங்களானது ஆரம்பிப்பதிலுள்ள தாமதங்கள், நோக்கெல்லை மாற்றங்கள் மற்றும் நிதிகள் போதாமை காரணமாக பிரதானமாக திட்டமிட்டவாறு நிறைவேற்றபட்பட முடியாதிருந்தன.

(இ) செயற்திட்டங்களின் ரூபா 681 மில்லியன் தொகையான மொத்தச் செலவினத்தில் 31 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்திய ரூபா 210.8 மில்லியன் தொகை சம்பளங்கள் மீது செலவிடப்பட்டிருந்தன. மேலும் உத்தியோகத்தர்களிற்குச் செலுத்தப்பட்ட சம்பளங்கள், கூலிகள் மற்றும் படிகளின் தொகை 2016 ஆம் ஆண்டிற்கான கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக தெளிவாக இனங்காணப்பட முடியாதிருந்தது.

(ஈ) அரசாங்க வைத்தியசாலைகளிலுள்ள வைத்தியசாலை சுகாதாரப் பதிவேட்டு முறைமை செயற்திட்டமானது 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் 300 அரசாங்க வைத்தியசாலைகளின் சுகாதார பராமரிப்பு சேவைகளின் தரம் மற்றும் வினைத்திறனை முன்னேற்றுவதை இலக்கிட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டில் 45 வைத்தியசாலைகள் மேவுகை செய்யப்படுவதற்கு இலக்கிடப்பட்டுள்ளன. ஆரம்ப நிலை ஆய்வை (baseline survey) மேற்கொள்வதற்கான மதியுரை பெறுகை பூர்த்தி செய்யப்பட்டிருக்காத போதிலும் ஆரம்ப நிலை ஆய்வு அறிக்கையை பெற்றுக்கொள்ளாமல் 45 வைத்தியசாலைகளிற்கான கணனி வன்பொருள் மற்றும் உப பாகங்களின் பெறுகையை கம்பனி தொடங்கியிருந்தது.

(உ) மேற்படி செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்த போதிலும் செயற்திட்ட முன்மொழிவின் பிரகாரம் 2018 செப்தெம்பர் 6 வரை அனைத்து தரப்பினர்களினதும் வகிபங்கு மற்றும் பொறுப்புக்களை வரையறுத்து சுகாதார அமைச்சு மற்றும் கம்பனிக்கிடையே புரிந்துணர்வு விஞ்ஞாபனம் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் 2016 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த செயன்முன்னேற்றம் 62 சதவீதமாக இருந்தது.

(ஊ) இது கட்டணமற்ற (free) Wi-Fi செயற்திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு 3500 இடங்களில் ஸ்தாபிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் 2017 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு பௌதீக செயன்முன்னேற்றத்தின் 14 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 512 இடங்களில் மாத்திரம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கம்பனியின் தகவல்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் பௌதீக செயன்முன்னேற்றம் 57 சதவீதமாக இருந்தது.

(எ) மாதமொன்றிற்கு நபரொருவரிற்கு 100 எம்பி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் சராசரிப் பயன்பாட்டாளர்களில் 30 சதவீதத்தினர் மாத்திரமே மொத்த ஒதுக்கீட்டையும் பயன்படுத்தியிருந்ததுடன் பயன்பாட்டாளர்களில் 41 சதவீதத்தினர் மாதமொன்றிற்கு 25 எம்பி ஐ விட குறைவாக பயன்படுத்தியிருந்தனர். 2015 ஆம் ஆண்டிற்கான கட்டணமற்ற Wi-Fi செயற்திட்டத்தின் அறிவூட்டல் மற்றும் மேம்படுத்தலிற்காக ரூபா 10.2 மில்லியனை கம்பனி செலவிட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் பயன்பாடு மற்றும் அறிவூட்டல் போதுமான மட்டத்தில் காணப்படவில்லை.

(ஏ) பரீட்சிக்கப்பட்ட 161 நனசல நிலையங்களில் (Nanasala Centers) 60 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 96 நிலையங்கள் பயிற்றப்பட்ட ரெலி நிலைய (tele center) செயற்படுத்துநர்கள் காணப்படாமை, உயர் பராமரிப்புக் கிரயம், கணனிகள் மற்றும் உப பாகங்கள் பயன்படுத்தக்கூடிய நிலையில் காணப்படாமை, இணைத்தல் சிக்கல்கள் மற்றும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு போதாமை காரணமாக முழுமையாக செயற்பட்டிருக்கவில்லை. மேலும் கம்பனியின் அறிவைக் கொண்டிராமல் பதிவு செய்யப்பட்ட சங்கங்கள், அமைப்புக்கள் மற்றும் சமயம் சார்ந்த இடங்கள் தவிர தனியார் உரிமைத்துவத்தின் கீழ் அதிகமான நனசல நிலையங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆகக் குறைந்தது 10 கிலோமீற்றர் வீச்சிலான தூரத்திற்கு முரணாக ஸ்தாபிக்கப்பட்ட சில நனசல நிலையங்கள் உருவாக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த முகவரிகளில் காணப்படாததுடன் அத்தகைய நிலையங்கள் வேறு இடங்களில் அமைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அதிகமான நனசல நிலையங்கள் நிலையான சொத்துப் பதிவேடுகளைப் பேணியிருக்கவில்லை. எவ்வாறாயினும் கம்பனியால் ஏற்கனவேயுள்ள நிலையங்களை மீளமைப்பதற்கு அல்லது செயற்படு நிலையங்களை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காததுடன் நனசல நிலையங்கள் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட சேவைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) எல்ஜீஎன் 1.0 மற்றும் எல்ஜீசீ 1.0 செயற்திட்டங்களின் பராமரிப்புக் கிரயத்தை தாங்கிக்கொள்வதற்கான பொறிமுறையொன்றை தயாரிப்பதற்கு தேசிய திட்டமிடல் திணைக்களம் பரிந்துரை செய்திருந்த போதிலும் பராமரிப்புக் கிரயத்தை அறவீடு செய்வதற்கு கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. லங்கா அரசாங்க கிளவுட் 1.0 (எல்ஜீசீ 1.0) மற்றும் லங்கா அரசாங்க வலையமைப்பு (எல்ஜீஎன் 1.0) என்பவற்றின் பராமரிப்புச் செயற்திட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக செயன்முன்னேற்றம் மற்றும் நிதி செயன்முன்னேற்றம் என்பன முறையே 51 சதவீதம் மற்றும் 11 சதவீதமாக காணப்பட்டன. செயற்திட்டங்கள் இலக்கினை அடைந்திருக்காதமை அவதானிக்கப்பட்டது.

(ஒ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான லங்கா அரசாங்க வலையமைப்பு 2.0 இன் பௌதீக செயன்முன்னேற்றம் மற்றும் நிதி செயன்முன்னேற்றம் என்பன முறையே 34 சதவீதம் மற்றும் 17 சதவீதமாக காணப்பட்டன. லங்கா அரசாங்க வலையமைப்பு 2.0 செயற்திட்டத்தை அமுல்படுத்துவதிலுள்ள தாமதம் கம்பனி அமுல்ப்படுத்திய 10 செயற்திட்டங்களில் தாமதத்தை விளைவித்திருந்தது.

### 3.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

ஈ-இலங்கை நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான கொடையாளராக உலக வங்கி காணப்படுவதனால் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரிற்கு (ஐசீரீஏ) விரிவுபடுத்தப்பட வேண்டிய அத்தகைய சுயாதீனத்திற்கான முக்கிய தேவைப்பாடு குறிப்பிடப்பட்டிருந்த 2003 யூலை 16 ஆம் திகதிய சீஎம்பி/03/0884/134/027 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் ஊடாக நிதி மற்றும் நிர்வாக அம்சங்கள் தொடர்பாக முழுமையான தனியுரிமை ஐசீரீஏ இற்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கம்பனியானது தற்போது முழுமையாக திரண்ட நிதியத்தில் தங்கியிருக்கின்றதுடன் முன்னர் காணப்பட்ட நிதி மற்றும் நிர்வாக தனியுரிமை அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தற்போதும் தொடரப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 3.3 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியால் ஏற்படுத்தப்பட்ட செலவினம் மீதான போதிய நிதிக் கட்டுப்பாடு தொலைத்தொடர்பு மற்றும் டிஜிற்றல் உட்கட்டமைப்பு அமைச்சில் காணப்படாததுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏற்பட்ட ரூபா 329,716,731 தொகையான பொறுப்புக்கள் காணப்பட்டன.

(ஆ) லங்கா அரசாங்க வலையமைப்பு செயற்திட்டத்திற்காக (எல்ஜீஎன்) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 145.7 மில்லியன், ரூபா 200 மில்லியன் மற்றும் ரூபா 50 மில்லியனாக ரூபா 395.7 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஸ்ரீலங்கா ரெலிக்கொம்மிற்கு செலுத்த வேண்டிய 2011 ஆம் ஆண்டிலிருந்து தீர்ப்பனவு செய்யப்படாத விலைப்பட்டியல்களின் பெறுமதி ரூபா 255,632,822 தொகையாகும். மேலும் ரூபா 226,408,429 நிதியேற்பாடுகள் ஸ்ரீலங்கா ரெலிக்கொம்மின் பொறுப்புக்களை தீர்ப்பதற்காக 2016 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்திற்கிணங்க வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளில் ரூபா 29,364,694 மற்றும் ரூபா 24,977,333 தொகைகள் முறையே தொகுதியின் உத்தியோகத்தர்களின் சம்பளக் கொடுப்பனவுகளிற்காகவும் இனங்காணப்படாத செலவினங்களிற்காகவும் பயன்படுத்தப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

(இ) வரிசை அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் அமைச்சிடமிருந்து 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 329,716,731 நிலுவைத் தொகையை கம்பனி கோரியிருந்த போதிலும் ரூபா 81,476,189 தொகை கம்பனிக்கு செலுத்த வேண்டியதாக காட்டப்பட்டிருந்தது.

## 3.4 நிதியங்களின் குறைப்பயன்பாடு

பில் அன்ட் மெலின்டா கேற்ஸ் பவுண்டேஷனுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்ட நிதிகள் செயற்திட்டத்திற்கானது தவிர ஏதாவது ஏனைய நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட முடியாது. எவ்வாறாயினும் மூன்று செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்ட ரூபா 130.05 மில்லியன் நிதி ஏற்பாட்டில் 97 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 126.2 மில்லியன் தொகை கம்பனியின் குறித்த நோக்கத்தை தவிர்த்து கம்பனியின் ஏனைய செயற்பாடுகள் தொடர்பான செலவினத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 3.5 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 2 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2 ஆம் பிரிவின் பிரகாரம் மனித வளத் திட்டமானது மனித வளப் பாதீட்டை ஒன்றிணைத்து கம்பனியால் தயாரிக்கப்பட வேண்டியதுடன் இது திறைசேரியிலுள்ள பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். எனினும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அத்தகைய திட்டம் கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2003 யூன் 2 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளை வலியுறுத்தி கம்பனியால் ஒவ்வொரு பதவிக்குமான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2003 யூன் 2 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.6 ஆம் பிரிவின் பிரகாரம் முறையான நடைமுறையைப் பின்பற்றி ஒழுங்கான அடிப்படையில் கம்பனியால் செயலாற்றல் மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் 2015 திசெம்பர் 21 ஆம் திகதிய சபைத் தீர்மானத்தின் பிரகாரம் சபை அங்கீகரித்த விசேட மீளாய்வுடனான ஆலோசனையின் போதும் குழு அங்கீகாரத்தின் போதும் பதவியணியினர் மதிப்பீடுகளை இறுதியாக்குவதற்கு முகாமைத்துவப் பணிப்பாளர்/ சீஈஓ இற்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்தது. எனினும் பதவியணியினரின் சம்பளங்கள் மீளாய்வாண்டில் திருத்தம் செய்யப்பட்டு செயலாற்றல் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததை உறுதிப்படுத்துவதற்கான சான்று கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டம் என்பன இன்றி கம்பனியின் ஊழியர்கள் மற்றும் மதியுரையாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன் ஸ்ரீலங்கா ஐரீ மற்றும் பீபீஎம் துறை இழப்பீடு மற்றும் ஸ்ரீலங்கா அசோசியேஷன் ஒவ் சொப்ட்வெயார் அன்ட் சேவிஷஸ் கம்பனிகளின் (எஸ்எல்ஏஎஸ்எஸ்சீஓஎம்) நலன் ஆய்வு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 187 ஆக இருந்ததுடன் ஊழியர்களின் மாதாந்த சம்பளம் ரூபா 30,000 தொடக்கம் ரூபா 755,000 வரையான வீச்சில் காணப்பட்டது. எவ்வாறாயினும் 2003 யூன் 2 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.7 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏதாவது தேவைப்பாடு தொடர்பில் கம்பனியால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) செயற்திட்டங்களிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மூலதன நிதி ஏற்பாடுகள் மீண்டெழும் நிதி ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்யாமல் சம்பளக் கொடுப்பனவுகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஊ) 2012 இன் 2 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 6.31ஆ பிரிவு மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 33 ஐரீ உத்தியோகத்தர்களிற்கான ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்புக்கள் கம்பனியால் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் அவ் ஊழியர்களிற்கான தனிநபர் கோவைகள் பேணப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பெறுகை மற்றும் ஒப்பந்த செயன்முறை

#### 4.1.1 பெறுகைகள்

(அ) கம்பனியால் பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1(இ) வழிகாட்டலின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்காக விபரமான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 சனவரி 20 இல் தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பிரதான பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் 351 பெறுகை விடயங்கள் 2016 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் இது 2016 திசெம்பர் 02 இல் 384 வரை அதிகரித்திருந்தது. எனினும் அவற்றில் 40 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 152 பெறுகைகள் மாத்திரம் 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

(இ) பெறுகைக் கைநூலின் 2.8.4 இன் பிரகாரம் பெறுகை தொடர்பாக தெரிந்திருக்கின்ற ஆகக் குறைந்தது ஒரு உறுப்பினர் வரிசை அமைச்சு அல்லது வெளியிலிருந்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்காக பெறுகை நிறுவனத்திற்கு நியமனம் செய்யப்பட வேண்டிய போதிலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் உறுப்பினர்களாக கம்பனியில் வேலை செய்கின்ற உத்தியோகத்தர்கள் மாத்திரம் நியமனம் செய்யப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(ஈ) பெறுகைக் கைநூலின் 2.4 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் ஒவ்வொரு செயற்திட்டத்தினதும் மொத்தக் கிரய மதிப்பீட்டிற்கிணங்க பெறுகைக் குழு தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியானது செயற்திட்டங்களின் கீழ் ஒவ்வொரு பெறுகையின் தனித்தனியான கிரய மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு பெறுகைக் குழுவை தீர்மானித்திருந்தது.

(உ) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.3.3 இன் பிரகாரம் ஆரம்ப மொத்தக் கிரய மதிப்பீட்டை தயாரித்த பின்னர் கேள்வி கோருவதற்கு கருத்தில் கொள்ளத்தக்களவு காலம் எடுக்கப்பட்டால் பணவீக்கம் மற்றும் ஏனைய காரணிகளை கருத்தில் கொண்டு மொத்தக் கிரய மதிப்பீடு நாளது வரையாக்கப்பட்டு உரிய அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். ரூபா 102,500,000 கூட்டுத்தொகையான மூன்று பெறுகைகளின் கிரய மதிப்பீடுகள் ரூபா 23,789,800 ஆல் விஞ்சியிருந்த போதிலும் அவ் மதிப்பீடுகள் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) காணிப் பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்திற்கான ரப்லெட் பிசீகள் (Tablet PCs) மற்றும் மடிக் கணனிகளின் பெறுகைகளின் ஆரம்ப கிரய மதிப்பீடு ரூபா 5 மில்லியனாக இருந்ததுடன் இது முறையான அங்கீகாரம் இன்றி ரூபா 15 மில்லியன் வரை 200 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்தது. எனினும் ஒப்பந்தம் ரூபா 10.8 மில்லியனிற்கே வழங்கப்பட்டிருந்தது.

(எ) ரூபா 20 மில்லியன் தொகையான தேசிய கட்டணமற்ற Wi-Fi வலையமைப்பிற்கான Wi-Fi சேவை முகாமைத்துவ தீர்வு ஒன்றை அமுல்ப்படுத்துகின்ற பெறுகையின் மொத்தக் கிரய மதிப்பீட்டுடன் ஒப்பிடும் போது 22 சதவீதம் தொடக்கம் 593 சதவீதம் வரையான அதிகளவு முரண்கள் அவதானிக்கப்பட்ட போதிலும் விலைவீதப் பகுப்பாய்வைப் பெற்றுக்கொள்ளாமல் ரூபா 7.1 மில்லியனான கணிசமானளவு மிகக் குறைவாக பதிலளித்த விலைமனு தெரிவுசெய்யப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7.9.11(அ) பிரிவின் பிரகாரம் அத்தகைய விலைமனுதாரர் ஆபத்தான அல்லது மிகவும் முக்கியமான விடயங்கள் தொடர்பாக யதார்த்தமற்ற குறைந்த விலைவீதங்களை வழங்கியிருந்தால் ரீஈசீயின் திருப்தித்தன்மையை உறுதிப்படுத்துமாறு விலைமனுதாரர் கோரப்பட வேண்டியதுடன் விலைவீதப் பகுப்பாய்வொன்றை வழங்குமாறு கேட்கப்படலாம்.

**4.1.2 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.8 மற்றும் 5.4.10 ஆம் பிரிவுகள் மற்றும் ஒப்பந்த உடன்படிக்கையின் சீசீ 17.1 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் ரூபா 7,142,800 பெறுமதியான தேசிய கட்டணமற்ற Wi-Fi வலையமைப்பிற்கான Wi-Fi சேவை முகாமைத்துவ தீர்வு ஒன்றை அமுல்ப்படுத்துகின்ற பெறுகைக்காக செயலாற்றல் பிணை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தெரிவு செய்யப்பட்ட மாதிப் பரிசோதனையின் பிரகாரம் பெறுகை மற்றும் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட திகதியிலுள்ளவாறு செயலாற்றல் பிணைகளை சமர்ப்பிக்கத் தவறிய 07 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

**4.1.3 தாமதமான செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 3,363.25 மில்லியன் பெறுமதியான வீட்டுடமை மாற்ற முகாமைத்துவ முறைமை செயற்திட்டத்திற்காக ரூபா 88.5 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் பிரதான பெறுகையில் ஏற்பட்ட பிரச்சனையான நிலைமை காரணமாக 2017 யூலை 11 தொடக்கம் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2003 தொடக்கம் 2014 வரையான காலப்பகுதியின் போது உலக வங்கி நிதியிட்ட ''ஈ- இலங்கை'' செயற்திட்டத்தின் கீழ் பொதுத் துறையை மீள பொறியியல்படுத்துவதற்காக (re-engineering) அமுல்ப்படுத்தப்பட்ட ஆறு செயற்திட்டங்கள் பட்டியல்ப்படுத்தப்பட்ட காலப்பகுதியினுள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் அச் செயற்திட்டங்கள் 2016 தொடக்கம் 2018 வரையான மூன்று ஆண்டுகளிற்கான திட்டமொன்றின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிலிருந்து மீள அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான ரூபா 1,442.57 மில்லியன் மொத்த மதிப்பீட்டில் ரூபா 171.34 மில்லியன் தொகை 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவிடப்பட்டிருந்தது.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | சொத்து முகாமைத்துவம் | ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பெறுமதி கணிப்பீடு, ஆவணப்படுத்தல், உரிமைத்துவத்தை மாற்றுதல் மற்றும் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் வளங்களின் பயன்பாடு என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | மனித வள முகாமைத்துவம் | விதிகள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் மனித வளங்கள் முகாமை செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நிதி முகாமைத்துவம் | ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ தந்திரோபாயங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | கடன்கொடுத்தோர் மீதான கட்டுப்பாடு | முறையான அங்கீகாரம் இன்றி பொறுப்புக்களிற்கான கடப்பாடுகள் ஏற்படுத்தப்படுதல் |
| (உ) | பதவியணியினர் நிர்வாகம் | தேவையான ஆவணங்களை உள்ளடக்கி தனிநபர் கோவைகள் பூரணமாக பேணப்பட்டிருக்கவில்லை. |